RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s184

OPEN ACCESS

# மணிமேகலை காப்பியம் முன்வைக்கும் அறவியல் கருத்துகளில் புலப்பாட்டு நெறியின் தாக்கம்

**க. அன்பரசு** [அ, *]

[அ] தமிழியல் துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# Impact of Rhetoric on the Scientific Concepts in the Tamil Epic Manimegalai

**G. Anbarasu** [a, *]

[a] Department of Tamil Tamilology, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: anbu1204@gmail.com

Received: 23-07-2022
Revised: 18-09-2022
Accepted: 02-10-2022
Published: 08-12-2022

**ABSTRACT**

'Rhetoric' is the common word given for both theoretical studies and literary criticism. Since the ancient period itself rhetoric is used in literature, but it entwined with literary theory and literary criticism only in 20th century. The controversy between the rhetoric and science dates back to thousand years. Rhetoric should be based on science was the main idea of Aristotle and Cicero who formally defined rhetoric their works. This article shows the relationship between rhetoric and science and how both these are linked in the Tamil literature. It also brings out the impact of rhetoric in science through the Tamil text 'Manimegalai'.

**Keywords:** Rhetoric, Tamil Literature, Relationship, Manimegalai

## முன்னுரை

தமிழிலக்கிய மரபில் அற இலக்கியங்களுக்கு உரிய இடம் தனிச்சிறப்பானவை. குறிப்பாக வீரயுக நாயகர்களை கதைத் தலைவர்களாக கொண்டு அவர்களின் சாகசங்களை அதீத வருணனைகளுடன் உலகின் தொல்காவியங்கள் காட்சிப் படுத்தியப் போது தமிழின் காப்பிய மரபு பெண் கதை மாந்தர்களை தலைமை கதைமாந்தர்களாக படைத்து உலகிற்கு அறச் செய்திகளை போதிக்கும் தகைமையில் எழுந்துள்ளது. அவ்வகையில் தமிழின் முதல் பௌத்தச் சமயக் காப்பியமும் மணிமேகலையெனும் விளிம்பு நிலை பெண் பாத்திரத்தை தலைமைக் கதை மாந்தராக கொண்டு சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்டுள்ள 'மணிமேகலை' காப்பியத்தில் தொழிற்படும் அறவியல் கருத்துக்களையும் புலப்பாட்டு நெறித் திறத்தையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.புலப்பாட்டு நெறி என்பது இலக்கியக் ஆக்கத்தின் கட்டமைப்பு விதிகளை பற்றிய உருவம் சார்ந்த கோட்பாடாகவும் இலக்கியத்தின் உள்ளடக்கம் சார்ந்த விழுமியங்களை முன்வைக்கும் தன்மையினையும் உடையது, வசீகரமான மொழிச் செயல்பாடானது பொதுவாக புலப்பாட்டு நெறியென அடையாளப்படுத்தப்படுகிறது, அதன் காரணமாக கருத்துக்களுக்கான முக்கியத்துவம் பின் தள்ளப்படுகிறது. இக்கட்டுரை புலப்பாட்டு நெறியானது கருத்துகளுக்கு அதாவது உள்ளடக்கத்திற்கு முதன்மையளிக்கும் வகையில் மணிமேகலை காப்பியம் வெளிப்படுத்தியுள்ள அறவியல் கருத்துக்களை சுட்டிக்காட்டி அக்கருத்துக்களுக்கு வளம் சேர்க்கும் புலப்பாட்டு நெறி கூறுகளை அடையாளப் படுத்துகின்றது.

## புலப்பாட்டு நெறியும் அறவியலும்

ஆங்கிலத்தில் 'Rhetoric' என வழங்கப்படும் புலப்பாட்டு நெறியானது மொழியின் வள ஆதாரங்களைக் கொண்டு ஒரு படைப்பாக்கத்தை அதனை படிப்போரின் கருத்தாக மாற்ற உதவும் கலையாகும். எந்த ஒரு இலக்கியமும் வெற்றியடைய வேண்டுமாயின் அது படிப்போரின் உள்ளத்தைக் கவருவதாகவும், அவர்கள் மீது தாக்கம் செலுத்தும் வண்ணமும் இருப்பது அடிப்படையாகும். அதற்கு புலப்பாட்டு நெறி இன்றியமையாததாகிறது. கருத்தை தெளிவாகவும், ஈர்ப்புடனும் வெளிப்படுத்த கையாளப்படுகின்ற மொழிச் செயலப்பாட்டுக் கூறுகளின் கட்டமைப்பு முறைமையை புலப்பாட்டு நெறி எனலாம் (Dakshinamurthy, 1984). புலப்பாட்டு நெறியை ஒரு 'கலை' என வரையறுத்து அதற்கான விதித் தொகுப்பை முறையாக அளித்தவர் கிரேக்க மெய்யியலாளர் 'அரிஸ்டாட்டில்' ஆவார். பண்டையக் கிரேக்கத்தில் தோற்றம் கொண்ட காலந்தொட்டே புலப்பாட்டு நெறிக்கும் அறவியலுக்கும் இடையிலான சர்ச்சை எழுந்துவிட்டது. ஏனெனில் அணியிலக்கண கவர்ச்சியின் துணையுடன் ஒருவர் தனது மொழித்திறத்தினால் பிறரை தவறான கருத்துக்களின்பால் திசைதிருப்ப முடியும், அறமற்ற செயல்களுக்கு வழிகாட்ட இயலும். புலப்பாட்டு நெறியின் மீதான இத்தகைய விமர்சனத்தை முதன் முதலாக கூறி புலப்பாட்டு நெறி மீதான கடுமையான விமரிசனங்களை முன்வைத்தவராக விளங்குபவர் அரிஸ்டாட்டிலின் ஆசிரியர் 'பிளாட்டோ' ஆவார். அன்று தொட்டு புலப்பாட்டு நெறியானது அறம் சார்ந்தும், கேட்போரை சிந்திக்க தூண்டும் வகையிலும் அமைவதே சிறந்த சிந்தனாப்பூர்வ புலப்பாட்டு நெறி (Deliberative Rhetoric) என அழைக்கப்படுகிறது. தமிழில் திருக்குறள் புலப்பாட்டு நெறி அமையவேண்டியத் தன்மையினைப் பற்றி

"வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க

சொல்லேர் உழவர் பகை"

வில்லை ஏராக கொண்டவனுடன் பகைக் கொண்டாலும் சொல்லை ஏராக கொண்டவனுடன் பகைக் கொள்ளக் கூடாது என்கிறது (Parimelagar, 2017). வில்லை விட சொல் வலியது எனக் கூறும் இக்குறள் தன்னளவில் கருத்தாலும் வில், சொல் என இயைபு நடையில் அமையப்பெற்று வடிவத்தாலும் புலப்பாட்டு நெறிச் சிறப்புடன் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். அதேபோது சொல்லானது அறத்தோடு அமையவேண்டியத் தன்மையைப் பற்றி பல்வேறு இடங்களில் குறள் குறிப்பிடுகின்றது.

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை

நாடி இனிய சொலின்." (Parimelagar, 2017)

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்

அறங்கூறும் ஆக்கம் தரும்" (Parimelagar, 2017)

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்

தீமை இலாத சொலல்."

ஆகிய குறள்கள் ஒருவரின் பேச்சானது எவ்வாறு அறம் சார்ந்தே அமைய வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுபவனாக உள்ளன (Parimelagar, 2017). ஏனேனில் வசீகரமானப் பேச்சு தீமையை நோக்கியும் அறியாமையை நோக்கியும் அழைத்துச் செல்லும் ஆபத்தை உடையதாகவும் விளங்குகிறது. இந்நிலையில் ஒரு படைப்பின் புலப்பாட்டுத்திறம் அதன் வசீகரமான கவர்ந்திழுக்கும் தன்மையினால் மட்டும் சிறப்பு பெற்றுவிடுவதில்லை. மாறாக அப்படைப்பு அறிவார்த்தமாகவும், அறத்தன்மையினதாகவும் விளங்கும் போதே சிறப்புறுகிறது. மொழியை அறத்துடன் கையாளுவதைப் பற்றி தமிழ்மரபு எடுத்துரைத்துள்ளது. இது தமிழ் புலப்பாட்டு நெறிக்குரிய சிறப்பம்சமாகும்.

## மணிமேகலையில் அறவியலும் புலப்பாட்டு நெறியும்

தமிழின் முதல் பௌத்தக் காப்பியமான சீத்தலைச் சாத்தனரால் இயற்றப்பட்ட 'மணிமேகலை' அறமும், புலப்பாட்டு நெறிச் சிறப்பும் நிரம்பப் பெற்றுள்ள காப்பியமாகும். விளிம்புநிலைச் சமூகத்தில் பிறந்த மணிமேகலையை தலைமைக் கதாப்பாத்திரமாக கொண்டு பல்வேறு சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும், அறக் கருத்துக்களையும் மற்றும் பௌத்தச் சமயத்தின் சாரமானக் கருத்துக்களையும், தருக்கத்தின் வழி நின்று ஆழமாக எடுத்துரைக்கும் புலப்பாட்டு நெறித் திறம் நிரம்பிய இலக்கியப்படைப்பாக மணிமேகலைக் காப்பியம் விளங்குகின்றது. மணிமேகலைக் காட்டும் அறத்தை துன்ப நீக்கம் சார்ந்தது, பெண்டிர் சார்ந்தது என இரண்டாக வகைப்படுத்துகிறார். துன்ப நீக்கம் சார்ந்த அறங்கள் என்பவை மக்களுக்கு துன்பம் தரவல்லவற்றை எடுத்துக் காட்டி அவர்கள் கடைபிடிக்க வேண்டிய நல்லறங்கள் எவை என்பதையும் எடுத்துச் சொல்பவனவாக அமைந்துள்ளன. மணிமேகலையில் பல்வேறு பாத்திரங்களின் வழி இவ்வறக் கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. இவ்விடம் புலப்பாட்டு நெறியும் அறவியலும் இணைந்து பயணிப்பதைக் காண்கிறோம், போதனை, இலக்கியப் படைப்பு உத்திகள் எனும் வகையில் புலப்பாட்டு நெறியும் அறக்கருத்துக்களை உள்ளடக்கமாய் கொண்டு அறவியலும் இணைந்துப் பயணப்படுகின்றன. சான்றாக 'பளிக்கறைப்புக்க காதை'யில் மணிமேகலையை தேடி வரும் உதய குமாரனிடத்திடத்தே உடம்பின் இயல்புக் குறித்து சுதமதி

“வினையின் வந்து வினைக்குவிளை வாயது

புனைவன நீங்கிற் புலாற்புறத் திடுவது

மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை

பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்

புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை

யவலக் கவலை கையா றழுங்க

றவலா வுள்ளந் தன்பாலுடையது

மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து

மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்”

உடலின் இயல்பையும் நிலையாமையையும், பல்வேறு வினைகளுக்கு அதுவே காரணமாய் அமைவதையும் எடுத்துச் சொல்கிறாள் (Swaminathar, 2013). இவ்விடம் உடல் குறித்த நிலையாமைக் குறித்து எடுத்து சொல்வதை நோக்கமாக கொண்டதாயினும் சுதமதி உதயகுமாரனுக்கு மட்டும் எடுத்துச் சொல்லும் தன்மையினதாய் மட்டும் அமையவில்லை. 'மக்கள் யாக்கை யிதுவென உணர்ந்து' எனக் கூறுவதன் மூலம் மக்கள் அனைவரையும் நோக்கி கூறப்படும் செய்தியாக மாறிவிடுகின்றது. அதாவது உதயகுமாரனுடன் நடைபெறும் உரையாடல் மக்களை நோக்கி வழங்கப்படும் போதனையாகப் பரிணமிக்கின்றது. இவ்வாறு புலப்பாட்டு நெறியும் அறக்கருத்தும் இணைவதைக் காண்கிறோம். மேலும் அறமெனப்படுவது யாது என வினாவினை எழுப்பி அதற்கு பசி நீக்குதல் எனும் செயலை மணிமேகலைக் காப்பியம் முன்மொழிகின்றது. இவ்விடம் அக்கருத்து அமையும் விதமானது வினாவை எழுப்பி அதற்கு தானே பதில் கூறும் தன்மையினதாய் அமைகின்றது அதாவது ஆங்கிலத்தல் 'Monologue' என வழங்கப்படும் தன்னுரைப் பாங்கினதாய் அமையாமல் 'dialogue' எனப்படும் உரையாடல் வகைமையினதாய் கட்டமைக்கப்பட்டுள்ளது. சான்றாக

“ஆருயிர் மருந்தாம் அமுத சுரபியெனும்

மாபெரும் பாத்திரம், மடக்கொடி! பெற்றனை

மக்கள் தேவர் எனவிரு சாரார்க்கும்

ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்

பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்

தவப்பெரு நல்லறம் சாற்றினர்- ஆதலின்

மடுத்ததீக் கொளிய மன்னுயிர்ப் பசி கெட

எடுத்தனள் பாத்திரம், இளங்கொடி தானென" (Swaminathar, 2013)

எனும் பாடலும்

"அறமெனப்படுவது யாது எனக் கேட்பின்

மறவாது இதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்"

எனும் பாடலும் குறிப்பிடத்தக்கன, பசிப் பிணி நீக்கலை அறமாகக் கூறும் இப்பாடல் வரிகள் 'நல்லறம் சாற்றினர்' 'மறவாது இதுகேள்' எனக் கூறுவதன் மூலம் உரையாடல் மற்றும் போதனை பேச்சு வகைமையினதாய் அமைந்துள்ளன. அரிஸ்டாட்டில் கூறும் 'சிந்தனைப் பேச்சு' (Deliberative Rhetoric) எனும் வகைமையோடு பொருத்தமுடையதாய் அமைந்துள்ளன (Swaminathar, 2013).

## மணிமேகலையின் தருக்கவியல்

ஓர் இலக்கியப்படைப்பு புலப்பாட்டு நெறித்திறம் மிக்கதாகவும் அதனுடாக அப்படைப்பை வாசிப்பவர்களின் சொந்தக் கருத்தாக மாற்றமடைவதற்கு தருக்கப் பொருத்தப்பாட்டுடன் அமைவது அவசியமாகின்றது. இதனை அரிஸ்டாட்டில் தனது 'Rhetoric' எனும் நூலில் 'logos' என வகைப்படுத்துகின்றார். மணிமேகலையானது பௌத்தச் சமயத்தையும் அதன் மெய்யியல்களையும் புலப்படுத்துவதை நோக்கமாக கொண்டு படைக்கப்பட்டுள்ளமையால் அதனுள் பௌத்த தருக்கவியலின் அடிப்படைகள் நிரம்பப் பெற்றுள்ளன. மணிமேகலைக் காப்பியத்தில் பல்வேறு கதாப்பாத்திரங்கள் தங்கள் கருத்துக்களை தர்க்கப் பொருத்தப்பாட்டுடன் உரையாடல்களாக முன்வைக்கின்றன அதுவே மணிமேகலையின் புலப்பாட்டு நெறிச் சிறப்பிற்கு அடிப்படையாக அமைகின்றன. மேலும் பௌத்த தருக்கவியலின் பின்புலத்தில் தனது புலப்பாட்டு நெறி அடிப்படைகளை மணிமேகலை அமைத்துக் கொண்டிருப்பதால் அவை இயல்பிலேயே அறவியல் சார்ந்தனவாகவும் உலகுகுறித்த பௌத்த மெய்யியலின் கண்ணோட்டத்தைப் பிரதிபலிப்பனவாகவும் விளங்குகின்றன. பௌத்த அளவையியலைப் பற்றி சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில்

"ஆதி சினேந்திர னளவை யிரண்டே

ஏதமில் பிரத்தியங் கருத்தளவென்ன"

எனும் வரிகளில் விளக்கிச் செல்கிறார் (Swaminathar, 2013). அவரது காலத்தில் கூறப்பட்டுள்ள பத்து அறிவுவாயில்களில் காட்சி அளவை, கருத்தலளவை என இரண்டை மட்டுமே புத்தர் முன்மொழிந்துள்ளதாக குறிப்பிடுகின்றார். காட்சி அதனை தொடர்ந்து எழும் கருத்து இவ்விரு அளவைகளும் உண்மையை விளங்கிக் கொள்ள உதவும் அடிப்படையான அளவைகள் ஆகும்.

இவ்வளவைகள் பற்றி விளக்கும், "பௌத்தம் ஏற்கும் அறிவுவாயில்களை மணிமேகலை, காட்சி என்னும் நேர் அறிவு அல்லது பிரத்தியட்சம், ஒன்றன் வாயிலாகப் பெறும் கருதல் என்னும் வழிஅறிவு அல்லது அனுமானம் என இரண்டாக பிரித்துக் காண்கிறது. இவ்விருவகை அறிவு நிலைகளும் தனித்தன்மை உடையன. இவை ஏனைய அறிவு வாயில்கள் அனைத்தையும் உள்ளடக்கியன. இவற்றில் காட்சி அறிவு ஒரு பொருளைப் பற்றி அறிதல் ஆகும். மற்றொன்றான கருதல் அதைப் பற்றியச் சிந்தனையாகும்" என்கிறார் (Seenivasan & Kamarasan, 2015).

காட்சி, கருதல் எனும் இரு அளவைகளின் அடிப்படையை விளக்கிச் செல்வதன் மூலம் பூடகமற்ற உண்மைகளை தெளிவாக விளக்கும் தருக்கவியல் மணிமேகலையின் அடிப்படையாக விளங்குகின்றது. மணிமேகலை முன்வைக்கும் அறக்கருத்துக்கள் உலகின் நிலையாமை, உடலின் நிலையாமை, துன்பத்தின் தோற்றுவாய்கள், அவற்றை நீக்கும் நல்வினைகள் ஆகியவற்றை உள்ளடக்கமாய் கொண்டவை. அவை உலகியலின் உண்மைகளைச் தெளிவாக விளக்குவதன் மூலமே அவற்றைப் போதிக்க இயலும். அதற்கு மேற்கூறியப் தருக்கவியல் கூறுகளை உள்ளடக்கியப் புலப்பாட்டு நெறி அவசியமாகின்றது. மணிமேகலை காப்பியத்தில் அவ்வாறான அளவையியலின் அடிப்படையில் அமைந்த புலப்பாட்டு நெறியும் அறவியலும் சிறப்பாகத் தென்படுகின்றன.

## முடிவுரை

எந்த ஒரு சிறந்தக் கருத்தும் தெளிவாகவும் பிறரைக் கவர்ந்திழுக்கும் ஆற்றலுடனும் கட்டமைக்கப்படும் பொழுதே தனது நோக்கத்தை நிறைவுச் செய்கின்றது. அவ்வகையில் அறச்சமயமும் அறிவுச் சமயமுமான பௌத்தச் சமயத்தை பரப்புவதை அடிப்படையாக கொண்டு இயற்றப்பட்டுள்ள தமிழின் பழங்காப்பியங்களுள் ஒன்றான 'மணிமேகலை' காப்பியத்தில் அக்காப்பியத்தின் நோக்கமான அறக்கருத்துகள் சிறப்பாக வெளிப்படுவதற்கு உதவும் புலப்பாட்டு நெறிக் கூறுகளையும் அறவியல் அடிப்படைகளையும் இக்கட்டுரை விளக்குகின்றது. குறிப்பாக இக்கட்டுரை புலப்பாட்டு நெறியின் வளமானப் பகுதிகளில் ஒன்றான தருக்கவியல் கூறுகளை அடையாளப்படுத்தியுள்ளது. ஒரு இலக்கியப் படைப்பின் உள்ளடக்க கருத்துக்கள் எவ்வளவிற்கு தர்க்கப் பொருத்தப்பாடுடையனவாக உள்ளனவோ அவ்வளவிற்கு அக்கருத்துக்கள் இயல்புடையனவாக அமைகின்றன, அறவியல் கருத்துக்களை முன்வைக்கும் மணிமேகலைக் காப்பியத்தில் உலகியல் நிலைமைகளோடு தொடர்புடைய செயல்பாட்டிற்கான அறக்கருத்துக்கள் மிகுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு வெளிப்படுத்தப்படுள்ள கருத்துக்கள் உருவம் உள்ளடக்கம் எனும் இலக்கியப் படைப்பின் இரு கூறுகளிலும் புலப்பாட்டுத் திறமிக்க வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளதை இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகின்றது. மேலும் புலப்பாட்டு நெறிக் கூறான தருக்கவியல் கருத்துக்களை பௌத்தத் தத்துவத்தின் பின்புலத்திலும், தமிழ் மரபின் பின்புலத்திலும் ஆராய்வதற்கான அடிப்படைகளை மணிமேகலைக் காப்பியம் கொண்டிருக்கிறது.

## References


Dakshinamurthy, P. (1984) Pulapattu Neri, Ilanchiyar Pathippagam, Chennai, India.

Parimelagar, (2017) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Seenivasan, R., Kamarasan, K. (2015) Manimekalaiyil Samayamum Meiyalum, Metha Pathippagam, Chennai, India.

Swaminathar, U.V. (2013) Manimekalai, U. Ve.SA., Library, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License